


# குண்டுவீச்சிலிருந்து பாதுகாப்பு



2ம் உலகப் போரில், ஜேர்மானிய விமானங்கள் குண்டு வீசும்போது அகழியொன்றினுள் பதுங்கியிருக்கும் ஆங்கிலேயச் சிறுவர்கள்.

# குண்டுவீச்சிலிருந்து பாதுகாப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள்

Liberation Tigers Of
TAMIL EELAM

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

இராணுவப் பிரிவு,

தமிழீழ விடுதலைப் புலிகள்

## நுழைவாயில்

சுதந்திர, சமதர்ம தமிழீழம் காண்பதற்கான போராட்ட வரலாற்றின் முக்கியமான கால கட்டமொன்றில் நின்று கொண்டிருக்கும் நாம், அதற்கேற்ற வகையில் முற்று முழுதாக தமிழீழ மக்களைத் தயார்ப்படுத்த வேண்டியுள்ளோம். இத் தயார்ப்படுத்தலையும், மக்கள் முனைப்புடன் தமிழீழப் போராட்டத்திற்கு அதிகளவு ஆதரவு நல்கி அதில் ஈடுபட்டு வருவதையும் பொறுக்காத சிறீலங்கா அரசு 'பயங்கரவாதிகள்' என்ற போர்வையில் தமிழினத்தையே பூண்டோடு அழிக்கத் திட்டமிட்டு வருகிறது. அதன் முதற்படிதான் தமிழீழப் பிரதேசத்தின் வானில் வளைய வரும், அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட குண்டு வீச்சு விமானங்கள். உறுதி மிக்க வியட்நாமிய மக்கள் மீது பயன்படுத்தித் தோற்றுப் போன பயங்கரவாதத் தந்திரோபாயங்களை அமெரிக்கா, இன்று தனது 'செல்லப் பிள்ளை' இஸ்ரேலின் மூலம் சிறீலங்கா அரசுக்குப் பாடமாகப் புகட்டியுள்ளது.

குண்டு வீச்சுக்களின் மூலம் மக்களிடையே குழப்பத்தையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தி, விடுதலைப் புலிகளுக்கு மக்களிடையே உள்ள ஆதரவைக் குறைத்து, தமிழீழப் போராட்டத்தை முளை மழுங்கச் செய்து விடலாம் என நினைக்கிறது சிறீலங்கா அரசு. அதனை முறியடிக்கு முகமாக வெளிவரும் இச்சிறு நூலானது, குண்டு வீச்சுக் காலங்களில் மக்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்து, அவர்களைப் பாதுகாத்து, போராட்டத்துடன் மேலும் ஐக்கியப்படுத்தும் என நம்புகிறோம். விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவினரால், மக்களுக்கு என வெளிவரும் இம்முதல் நூலைப் பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்களை அனைவரிடமும் எதிர்பார்க்கிறோம்.

இராணுவப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

குண்டு வீச்சானது, பல்வேறு வகைப்பட்ட கருவிகளால் நடத்தப்படினும், ஆகாய விமானங்களின் மூலம் போடப் படும் குண்டுகளே அளவில் பெரியவையாகவும், ஏனையவற் றுடன் ஒப்பிடும் போது கூடியளவு தாக்கத்தை அளிக்கக் கூடியனவாகவும் உள்ளன. எனவே இவற்றுக்கெதிரான பாது காப்பு நடவடிக்கைகளிலேயே நீங்கள் கூடியளவு கவனம் செலுத்துதல் வேண்டும். பொதுவாக கவச வாகனங்களில் அமைக்கப்பட்டுள்ள பீரங்கிகளானவை ஒரு வீட்டை முற்றாக தகர்ப்பதற்குரிய வலிமை வாய்ந்தவை அல்ல. இவற்றினால் உறுதியான சுவரொன்றில் ஒரு பெரிய துவாரமொன்றையே இட முடியும்.

ஆகாய விமானத் தாக்குதலுக்கான பாதுகாப்பு நட வடிக்கைகள் யாவை? இக்கேள்விக்கான பதிலானது தரப்படு முன்னர் உங்கள் மனதில் நீங்கள் கற்பனை செய்து வைத்திருக் கும் விமானத் தாக்குதலைப் பற்றிய மோசமான, பார தூர மான கற்பனைகளை அகற்றி விடுங்கள். ஏனெனில் ஆகாய விமானமானது உங்களது மன உறுதிக்கெதிரான ஆயுதமே யாகும். வெறுமனே பயங்கர சத்தத்தை எழுப்பிக் கொண்டு, தாழ்வாகப் பறந்து வந்து தாக்குவது மக்களிடையே பீதியை யும், குழப்பத்தையும் உண்டு பண்ண வேண்டும் என்ற ஒரே யொரு நோக்கத்தினாலேயாகும். அவர்கள் எதிர்பார்த்தபடி நீங்கள் சிதறி ஓடுவீர்களேயாயின் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டவர்களாவீர்கள். ஆனால் உறுதியான மன வலிமையுடன் எந்தவொரு தாக்குதலுக்கும் தாக்குப் பிடிக்கக்கூடிய ரீதியில் திட்டமிட்டு செயலாற்றுவீர்களே யாயின், குண்டு வீச்சுக்களினால் பெருமளவு உயிர்ச்சேதம் எதனையும் ஏற்படுத்த முடியாது.

ஜேர்மானியர்கள், லண்டன் நகரின் மீது 1-ம் உலகப் போரின் போது நிகழ்த்திய குண்டு வீச்சுத் தாக்குதலின் போது வீசப்பட்ட 128 குண்டுகளினால் 162 பேரை மட்டுமே கொல்லக் கூடியதாக இருந்தது. இதன் போது 432 பேர் காயமுற்றனர். வேறொரு சம்பவத்தின் போது 528 குண்டுகள் போடப்பட்ட இடத்தில் 916 இறப்புகளும், 2500 பேர் காயமுறவும் காணப்பட்டது. மேற்கூறிய சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்ட விமானங்களானவை அநேகமாக 1

குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பு.



சிதறியோடுவீர்களாயின் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டவர்களாவீர்கள்.

தொன் எடையுள்ள குண்டுகளை காவிச் சென்று வீசக் கூடியனவாய் இருந்தன. ஆனால் சிறீலங்கா அரச படையினரிடம் இதுவரை இரண்டு 551 இறுத்தல் (250 கிலோ) எடையுடைய குண்டுகளை கொண்டு சென்று வீசக் கூடிய 5 விமானங்களும், தற்பொழுது இத்தாலியில் இருந்து தருவிக்கப்பட்ட இரண்டு 276 இறுத்தல் (125 கிலோ) எடையுடைய குண்டுகளை கொண்டு செல்லக்கூடிய 6 விமானங்களும் மாத்திரமே உண்டு.

விமானங்கள் குண்டு வீசும் போது கண்டபடி ஓடுவது எந்தவித பலனையும் அளிக்கப் போவதில்லை. எந்தவொரு குண்டு வீச்சின் போதும் நேரடியாக குண்டு விழும் இடத்தில் ஏற்படும் உயிரிழப்பை விடவும், குண்டு வெடிப்பின் போது





மேலே அண்ணாந்து பார்க்காதீர்கள்.

உருவாக்கப்படும் சிதறு துண்டுகளே பெருமளவு உயிர்ச் சேதங்களை ஏற்படுத்துகின்றன. விமானங்கள் குண்டு வீச வரும் போது ஒரு போதும் ஒரு கூட்டமாக நின்று மேலே அண்ணாந்து பார்க்காதீர்கள். இயலுமானவரை நன்கு தூரத் தூர விலகி உங்கள் முகங்களை விமானத்திற்கு காட்டாதவாறு இருங்கள். ஏனெனில் மனித முகமொன்றானது மேலிருந்து பார்க்கும் பொழுது வேறெவற்றையும்விட இலகுவில் தெரியக் கூடியதாகும். உங்கள் முகங்கள் தெரியாவிடின் உங்களை விமான ஓட்டிகள் காணும் வாய்ப்பு குறைகின்றது. தற்செயலாய் கண்டு கொண்டாலும் உங்களை நேரடியாக தாக்கும் வண்ணம் குண்டு வீசுவது கடினமாகும். எனவே அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் யாதாயினும் மறைப்பு களினுள் சென்று விடுவதே பாதுகாப்பானதாகும். குண்டு

குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பு.


வீச்சொன்று நிகழும் போது, வெவ்வேறு ஐந்து சந்தர்ப் பங்களை எடுத்து அவற்றுக்குரிய பாதுகாப்பு வீதங்களை ஆராயும் போது அது பின்வருமாறு காணப்படுகிறது.











1. அகழியொன்றினுள் புகலிடம் தேடுவது — 95% பாதுகாப்பானது.
2. கல் வீடு ஒன்றினுள் புகலிடம் தேடுவது — 90% பாதுகாப்பானது.
3. தாழ் மறைப்புகளுக்குப் பின்னே படுப்பது — 67% பாதுகாப்பானது.
4. திறந்த வீதியொன்றில் குப்புற படுப்பது — 50% பாதுகாப்பானது.
5. திறந்த வீதியொன்றில் எழுந்து நிற்பது — பாதுகாப்பே கிடையாது.

இதிலிருந்து அகழி அல்லது உறுதியான கட்டிடமொன்றினுள் பாதுகாப்பு தேடுவதே உயிரிழப்பைக் குறைப்பதற்குரிய மிகச் சிறந்த வழிமுறையாகத் தெரிகின்றது. இருப்பினும் மக்களது அன்றாட வாழ்க்கையின் வேறுபட்ட பல சந்தர்ப்பங்களை எடுத்து நோக்கும் போது, பலவற்றில் உடனடியாக அகழியையோ அல்லது உறுதியான கட்டிடமொன்றையோ தேடி ஓடுவதென்பது சாத்தியமற்றது என்பதனால், முதலில் அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் செய்ய வேண்டிய செயல்முறைகள் கீழே தரப்படுகின்றன. ஒவ்வொரு செயல்முறைகளின் போதும் நீங்கள் நெருக்கமாக இராது தூரத்தூர விலகி இருக்க வேண்டுமென்பது மிக முக்கியமானதாகும்.

## திறந்த வெளியில் அல்லது தெருவில் உள்ளபோது...

அருகில் பாதுகாப்புக்குரிய விசேட அமைப்புக்கள் எதுவும் இல்லாத இச்சந்தர்ப்பங்களில் அவற்றினை நோக்கி தொலை தூரங்களுக்கு ஓட முயற்சிக்க வேண்டாம். நீங்கள் செய்ய வேண்டியது அவ்விடத்திலேயே குப்புற விழுந்து படுப்பதேயாகும். தொடர்ச்சியான தாக்குதல்கள் இடம் பெறுமாயின், ஒரு தாக்குதலுக்கும், அடுத்த தாக்குதலுக்கும் இடைப்பட்ட நேரத்தில், அருகில் உள்ள பள்ளங்களினுள்ளோ அல்லது நீர் வடிந்து செல்வதற்குரிய வடிகால்களினுள்ளோ உருண்டு சென்று விடுங்கள். அது உங்களுக்கு கூடியளவு பாதுகாப்பைத் தரக்கூடியது.


குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பு.




குப்புறப் படுக்கும் போது, நெஞ்சுப் பகுதியை நிலத்தில் இருந்து சற்றே மேலே தூக்கியவாறு, முழங்கைகளால் தாங்கிக் கொள்ளுங்கள். காதுகளை பருத்தித் துணித் துண்டுகளினுல் அடைத்து விடுங்கள். அது இல்லாவிடின் உங்கள் வேட்டியோ, சேலையோ, சட்டையோ எதுவாயினும் ஒன்றினது தலைப்புகளினுல் நன்கு அடைத்து விடுங்கள். உருட்டிய கைக்குட்டை அல்லது உடைகளின் ஒரு பகுதியை பற்களுக்கிடையில் இறுகக் கடித்துக் கொள்ளுங்கள். இவற்றின் மூலம் வெடிப்பதிர்வினுல், செவிப்பறை மென்சவ்வு பாதிப்படைவதோ அல்லது நாக்கு கடிபடுவதோ தவிர்க்கப்படும். விமான தாக்குதலின் போது திறந்த வெளிகளில் இருந்து ஒரு போதும் மேலே பார்க்காதீர்கள். ஏனெனில் வேறெவற்றையும்விட மனித முகங்கள் இலகுவாக அடையாளம் காணக் கூடியனவாகும்.

## பூட்டிய கட்டிடமொன்றின் அருகில் உள்ளபோது...

கட்டிடத்தின் வெளிச் சுவருக்கு அருகிலோ அல்லது கதவு வழிகள், வேறு உள்நுழை வழிகள் (Arch ways) போன்றவற்றின் அருகிலோ நிற்பது பாதுகாப்பானதாகும். சுவர்களுக்கு அருகில் நிற்கும் போது, அவற்றுடன் ஒட்டினுற் போல சாய்ந்தவாறு நிற்கக் கூடாது.



கட்டிடமொன்றின் உள்ளே உள்ளபோது...





க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி

குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பு.

கட்டிடத்தினுடைய அறையொன்றினுள், ஜன்னல்கள் ஏதுமற்ற, வெளிச் சூழலுடன் தொடர்பில்லாத சுவரொன்றினைத் தெரிவு செய்து அதன் அருகே நிற்கவும். ஆனால் கதவு அல்லது ஜன்னல்கள் போன்றவற்றின் நேரே நிற்க வேண்டாம். உடைந்து சிதறும் கண்ணாடித் துண்டுகள் ஆபத்தானவை. இவற்றைத் தவிர்ப்பதற்காக கண்ணாடி ஜன்னல், கதவுகளில் இருந்து விலகி சுவர் திருப்பங்களிலே நிற்பதே சிறந்த வழியாகும்.


புகையிரதம் ஒன்றில் உள்ளபோது...






உடனடியாக இருக்கைகளின் அடியில் தவழ்ந்து சென்று விடுங்கள். புகையிரதம் நின்று கொண்டிருக்குமாயின் அதன் அடியில்கூட சென்று விடுதல் மேலும் பாதுகாப்பானதாகும். ஜன்னல்களினூடாக எட்டிப் பார்த்தலோ அன்றி வெளியே குதித்து ஓடுதலோ நிச்சயமாக தவிர்க்கப்பட வேண்டியன. இரவு நேரமாயின், உடனடியாக புகையிரத விளக்குகளை அணைத்தல் புத்திசாலித்தனமானதாகும்.

பஸ் வண்டியொன்றினுள் உள்ளபோது...



உடனடியாக பஸ்ஸினை நிறுத்தச் செய்து வெளியே இறங்கி திறந்த வெளியில் உள்ளபோது செய்ய வேண்டியதைப் போல் குப்புற விழுந்து படுக்கவும்.


காரொன்றினுள் உள்ளபோது...



குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பு.

வீதியின் இடது பக்க ஓரமாக காரை நிறுத்தி, ஜன்னல்களை திறந்தபடியே விட்டு, கார்க் கதவுகளைப் பூட்டாமல், சாவியை அதற்குரிய இடத்தில் செருகியபடியே விட்டு விட்டு, காரினை விட்டு இறங்கி ஓடிச் சென்று வீதியொன்றில் உள்ளபோது செய்வதைப் போல் குப்புற படுக்க வேண்டும். கார் திறந்தபடியே சாவியுடன் இருப்பதனால், தற்செயலாய் நீங்கள் காயமுற்றிருந்தால் உங்களை வேறு யாராவது மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு இலகுவாயிருக்கும்.

மாட்டு வண்டி ஒன்றினுள் உள்ளபோது...



உடனடியாக கீழே குதித்து ஒரு சில யார் ஓடிச் சென்று குப்புற விழுந்து படுங்கள். சிறிது நேர அவகாசம் கிடைக்குமாயின் மாடுகளை அவிழ்த்து அருகிலுள்ள பெரிய மரமொன்றில் கட்டி விடவும்.

மந்தைகளுக்கான பாதுகாப்பு...

மந்தைகளை அருகிலுள்ள காணியொன்றிலோ அல்லது பாவனையற்ற மண்டபங்களிலோ சுற்றிலும் அடைத்து, சிதறி ஓடாதவாறு உள்ளே விட்டு விடுங்கள்,


மேற்கூறியவை அனைத்தும் குண்டு வீச்சின் பொழுது அருகில் பாதுகாப்புக்குரிய விஷேட அமைப்புக்கள் எதுவும் காணப்படாத போது உங்களது செயல்முறைகளாகும். இனி உங்களது வீடுகளில், கடைகளில், தொழிற்சாலைகளில் உள்ள போது எவ்வகையான விஷேட அமைப்புகளின் மூலம் உங்களைக் காக்க முடியும் எனப் பார்ப்போம்.

முதலில் சாதாரணமாக உள்ள கட்டிடங்கள் ஓரளவாவது வெடிப்பதிர்வுகளில் இருந்து பாதுகாக்கப் படுவதற்கான முறையில் மாற்றி அமைக்கப் படுதல் வேண்டும். இவ்வகையில் மாற்றி அமைக்க எடுக்கும் முயற்சிகள் இப்போதுள்ள சூழ்நிலையில் உங்களை அரச படையினர் விஷேடமாகக் கவனிப்பதற்கு வழி வகுத்து விடும். எனவே அவ்வப்போதுள்ள சூழ்நிலைகளுக்கும், உங்கள் வசதிக்கும் ஏற்றவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

பொதுவாக கட்டிடங்களானவை, குண்டு வீச்சுகளிற்கு எதிராக கட்டப்பட்டவை அல்ல. எனவே வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள் போன்ற மக்களுடன் தினமும் தொடர்புடைய கட்டிடங்கள் குண்டு வீச்சுக்களைத் தாங்கக்கூடிய வகையில் புனரமைக்கப்படுதல் வேண்டும். புனரமைத்தல் எனும் போது இங்கு பெரியளவு பொருட் செலவில் செய்யப்படுபவற்றை குறிப்பிடவில்லை. இதன் போது இலகுவாகக் கிடைக்கக்கூடிய பொருட்களையும், மலிவானவற்றையும் கொண்டு செய்யப்படும் வேலைகளே குறிப்பிடப் படுகின்றன. கட்டிடங்களுக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் எனப்படும் போது அவை நேரடியான குண்டு வீச்சுக்கு தாக்குப் பிடிக்கக் கூடியவை என்ற கருத்தைக் கொள்ளலாகாது. சிறிய குண்டுகளுக்கும், அருகில் விழுந்து வெடிக்கின்ற குண்டுகளினது வெடிப்பு அதிர்வுகளுக்கும், சிதறு துண்டுகளுக்கும் எதிரான பாதுகாப்பே இங்கு தரப்படுகிறது. இருப்பினும் சில முக்கியமான பொருட்களைக் கொண்ட கட்டிடங்கள் போன்றவை விஷேடமாகக் கவனிக்கப்பட்டு, முழுமையான பாதுகாப்புக்கு உட்பட்டவையாக மாற்ற வேண்டியதும் அவசியமாகும்.


கட்டிடமொன்றின் கண்ணாடி அமைப்புகள் விஷேடமாகக் கவனிக்கப்பட வேண்டியவையாகும். ஏனெனில் கண்ணாடிகள் உடையும் போது பெருமளவில் சிதறக் கூடியவை. அத்துடன் ஆபத்தை ஏற்படுத்தும் கூரான பொருட்களும்கூட. இக்காரணங்களினால் கதவு, ஜன்னல்களில் பொருத்தப் பட்டிருக்கும் கண்ணாடிப் பகுதிகள் பாதுகாக்

குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பு.



கப்பட வேண்டும். அதாவது உடைவுறும் கண்ணுடியின் பகுதிகள் சிதறிப் பறக்கா வண்ணம் காப்பிடுதல் வேண்டும். இதற்காக தடித்த துணிகளினுல் கண்ணுடியின் மேல் ஒட்டி விடுதல் ஒரு முறையாகும். அத்துடன் வெளிச் சூழலுடன் தொடர்புள்ள ஜன்னல்களின் ஊடாக அவற்றின் கண்ணுடித் துண்டுகளுடன் பிற சிதறு பொருட்களும் உள் நுழையக் கூடியதால், ஜன்னல் சட்டங்களின் உட்பக்கத்தில் 1/2 அங்குல கம்பி வலைகள் மூடி, அடிக்கப்படுதல் வேண்டும்.

வெளி வாசல்கள் போன்றவைகூட சிதறு துண்டுகளையும், வெடிப்பதிர்வுகளையும் உள்விடக் கூடியன. ஆதலால் அவையும் மூடப்படுதல் வேண்டும். இதற்காக வாசலுக்கு வெளியே நிலமட்டத்தில் இருந்து குறைந்தது 6 அடி உயரத்திற்கு சுவர் போன்ற அமைப்பு கட்டப்படுதல் வேண்டும். இதற்காக செங்கல் ஆனது உபயோகிக்கப் படுமாயின் 13.1/2 அங்குல தடிப்புள்ளதாகவும் (1.1/2 செங்கல் தடிப்பு), கொங்கிறீற் உபயோகப்படுத்தப் பட்டால் 9 அங்குல தடிப்



புள்ளதாகவும் அச்சுவர் அமைய வேண்டும். சுவர் கட்டுவதற்குரிய வசதி இல்லாவிடின் மணல் மூடைகளோ அல்லது இலகுவில் கிடைக்கக்கூடிய மரங்களோ சுவர் போன்று அடுக்கப்படுதலும் பாதுகாப்பானதாகும்.


தொடர்ச்சியான குண்டு வீச்சுக்கள் நடைபெறும் காலங்களில், பல மணித் தியாலங்கள் வரைகூட வெளியே நடமாட முடியாத ஒரு நிலை ஏற்படும். அக்காலங்களில் உணவு, இருப்பிடம், நீர் வசதிகள்கூட ஒழுங்கற்று காணப்படும். இப்படியான சந்தர்ப்பங்களில் உங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் போன்றன ஓரிடத்தில் சேமிக்கப் பட்டிருப்பின், வீணை அலைச்சல்களையும், மனக் குழப்பத்தையும், பீதியையும் தவிர்த்துக் கொள்ள முடியும். எனவே இக் காரணங்களுக்காக உங்களது வீடுகளிலோ, தொழிற்சாலைகளிலோ அன்றி கடைகளிலோகூட ஒரு அறையொன்று இதற்காக ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வறையானது நிலத்தின் கீழ் அமைந்திருப்பின் அது மிகச் சிறந்த ஒரு

பாதுகாப்பு வழியாகும். அவ்வகையான வசதிகள் இல்லாவிடின், யாதாயினும் ஒரு அறையொன்று ஆனல் அது வீட்டின் நடுப் பகுதியில் அமைந்திருக்கக் கூடியவாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பல மாடிக் கட்டிடமொன்றுயின் அவ்வறையானது கீழ்த் தளத்தில் இருக்க வேண்டும். அதன் மேற்கூரையானது, வலுவாக்கப்பட்ட கொங்கிறீற் (Reinforced Concrete) இனுல் ஆனதாகவும், அதன் மேல் வேறு இயந்திர சாதனங்கள் போன்ற பாரமான பொருட்கள் எதுவும் இல்லாதவாறும் பார்த்துக் கொள்ளல் வேண்டும். அவ்வறையினுள் கண்ணுடி ஜன்னல்கள் யாதாயினும் இருப்பின் அவற்றுக்கு முன் கூறப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். அல்லது அக்கண்ணுடிப் பகுதிகள் அகற்றப்பட வேண்டும். அத்துடன் எளிதில் தீப்பற்றக் கூடிய பொருட்கள் எதுவும் இல்லாதவாறும், அவ்வறைக்கு அருகில் எங்கும் தீ ஏற்படுத்தும் மூலகங்கள் இல்லாதவாறும் பார்த்துக் கொள்ளல் வேண்டும். அறையினுள் சென்று வரக் காணப்படும் சாதாரண வழியைவிட ஒரு அவசரகால வழி இருப்பதும் அவசியமானதாகும். 10'×10'×8' அளவுகளைக் கொண்ட அறையானது 5 நபர்களையும், 15'×10'×8' அளவுகளைக் கொண்ட அறையானது 7 நபர்களையும், 20'×15'×10' அளவுகளைக் கொண்ட அறையானது 13 நபர்களையும் தொடர்ச்சியாக 12 மணித் தியாலங்களுக்கு தங்க வைக்கக் கூடியது. மேற்குறிப்பிட்ட அளவுகள் மிகக் குறைந்த அவசியமானவையேயாகும். எனவே சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து அதிகளவு ஆட்களோ அன்றி அதிக நேரத்திற்கோ கூட இதனுள் தங்க வேண்டி வரும். எனவே அவ்வறையினுள் தங்க வேண்டி வரக்கூடிய நபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அதனுள் சேமிக்கப்படும் பொருட்களின் அளவும் திட்டமிடப்பட வேண்டும். பின் வரும் பொருட்கள் எந்நேரமும் அதனுள்ளே பாதுகாப்பாக, தயாராயிருக்க வேண்டும்.

1. குடிநீர்.
2. உணவு (தகரங்களில் அடைக்கப்பட்டவை விரும்பத் தக்கது.)
3. முதலுதவிப் பெட்டி.

4. உயிர் காப்பு உபகரணங்கள் (அலவாங்கு, பிக்கான், மண்வெட்டி, கயிறு போன்றவை.)
5. தீயணைப்பு கருவி, நீர்.
6. எண்ணெய் விளக்கு, மெழுகுதிரி, டோர்ச், தீப்பெட்டி.
7. பாட்டரியால் இயங்கும் ரேடியோ, புத்தகங்கள்.
8. மல, சல வசதி.
9. தளபாட, உடுப்பு வசதி.

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்



குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பு.

இப்பொருட்கள் நல்ல நிலையில் உள்ளனவா என அடிக்கடி பரிசீலிக்க வேண்டும். இதனுள் இருக்கும் சமயங்களில் கண்டபடி சுதைத்து, அசைந்து திரிவதால் அதிகளவு சக்தி இழப்பு ஏற்படும். எனவே ஓரிடத்தில் இருப்பதோ அன்றி படுப்பதோதான் சிறந்ததாகும்.

மேற்கூறப்பட்ட வகையிலான உறுதியான வீடுகளோ அல்லது அருகில் வேறு கட்டிடங்களோ கிடையாவிடின் உங்களது சூழலில் உள்ள அமைப்புகள் சிலவற்றை குண்டு வெடிப்பின் போது ஏற்படும் சிதறு துண்டுகளுக்கெதிரான பாதுகாப்புள்ளதாக எவ்வகையில் மாற்றலாம் எனக் கவனிப்போம்.

இதன் போது மரவாலைகள் முதலியவற்றில் மரம் அரிவதற்காக வெட்டப்பட்டிருக்கும் கிடங்குகள் பயன்படுத்தக் கூடியனவாகும். நீங்கள் பயன்படுத்துவதற்கு தேவையான பகுதியை விடுத்து ஏனைய பகுதியை சில பலகைகளினுலோ, மண் சாக்குகளினுலோ, தகரங்களினுலோ மூடி, குண்டு வீச்சு நிகழும் போது அதனுள் சென்றிருப்பது பாதுகாப்பானதாகும். உங்கள் சூழலில் உள்ள ஒரு சில கோயிற் கேணிகள் பாவிக்கப்படாத நிலையில் செடி, கொடிகள் வளர்ந்து கவனிப்பாரற்று இருக்குமாயின் அவற்றினைக்கூட நீங்கள் மேல் பகுதியை மூடிவிட்டு பயன்படுத்தலாம். அவ்வகையான கேணிகள் அகலம் கூடியவையாய் இருப்பின் இது சிறிது கடினமான செயலாகவே இருக்கும். பாதை ஓரங்களில் நீர் வடிந்து செல்வதற்காக வெட்டப்பட்டிருக்கும் வடிகால்கள் போன்றவற்றைக்கூட சற்று ஆழமாக்கி குண்டு வீச்சுக்களிற்கு எதிரான அகழிகளாக மாற்றலாம். இவறறைப் போல் தூர்ந்த கிணறுகள், மதகுகளின் கீழ்ப் பகுதிகள், பெரிய கான்கள் போன்றவைகூட உங்களை குண்டு வீச்சுத் தாக்குதல்களில் இருந்து பெருமளவு பாதுகாக்கும். சில வேளைகளில் மேற்பகுதி மூடக்கூடிய வசதி இல்லாவிடில், அவ்வாருன கிடங்குகளை பாதுகாப்பற்றது எனக் கருதி ஒதுக்கிவிட வேண்டாம். அவைகள் நேரடியாகவோ அல்லது ஒரு சில அடிகள் அண்மையிலோ விழுந்து வெடிக்கும் குண்டுகளுக்கு மட்டுமே பாதுகாப்பற்றனவாகும். அவ்வகையான

சந்தர்ப்பங்கள் மிக மிகக் குறைவானதாகும். மின்னலின் போது ஏற்படும் இடியானது ஒவ்வொன்றும், எமது தலைகளின் மீதே விழுந்து விடும் என்று எண்ணுவது எவ்வளவு முட்டாள்தனமானதோ அதைப் போன்றதே போடப்படும் குண்டுகளும் நேரடியாக எம்மீது விழுந்து வெடிக்கும் என எண்ணுதலுமாகும். எனவே குண்டு வீச்சுக்களிற்கு எதிரான வகையில் பிரத்தியேகமான அகழிகள் அமைப்பதற்கு இயலாதவர்கள் இயலுமானவரை மேற்கூறியவாறோ அல்லது வேறு வகையிலான ஏதாவதொரு பள்ளமோ, கிடங்கோ உங்கள் அருகில் காணப்படுமாயின் அவற்றினை குண்டு வீச்சிற்கெதிரான காப்பாக பயன்படுத்துவது சிறப்பானதாகும்.

இனி, நாம் குண்டு வீச்சிற்கெதிராக விசேடமாக அமைக்கப்படும் அமைப்புகளைக் கவனிப்போம். ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல் நேரடியாக குண்டு மேலே விழுவதற்கு பாதுகாப்பான அமைப்புகளைக் கட்டுவது என்பது பொருளாதார ரீதியில் ஒவ்வொருவருக்கும் சாத்தியமானதல்ல. இருப்பினும் நேரடியான தாக்குதலுக்கெதிரான ஒரு சில அமைப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

பொதுவாக இம்மாதிரியான அமைப்புகள் நிலத்தின் கீழ், அகழிகள் வடிவிலேயே அமைக்கப் படுகின்றன. ஏனெனில் நிலத்தின் மேல் அமைக்கப்படும் அமைப்புகளாயின் பக்கவாடுகளும்கூட குண்டு வீச்சுத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்கு முகமாகவே கட்டப்பட வேண்டும். இது மேலும் அதிகளவு பொருட் செலவை தரும் என்பதால் நிலங்கீழ் அமைப்புகளே விரும்பப் படுகின்றன. இதன் போது பக்கவாடுகள் அனைத்தும் மண்ணினால் பாதுகாப்பாக சூழப்பட்டிருப்பதால் மேல் பகுதிக்கு மட்டும் தாக்குதலை எதிர் கொள்ளக்கூடிய வகையில் கூரை அமைக்கப்படுதலே போதுமானதாகும். உதாதரணமாக 550 இறுத்தல் எடையுடைய உயர் வெடிமருந்தைக் கொண்ட வெடிகுண்டொன்றின் நேரடியான தாக்குதலை எதிர்கொள்ள வேண்டுமாயின் கூரையானது 9.1/2 அடி உயரமுடைய வலுவாக்கப்பட்ட கொங்கிறீற்றினால் (Reinforced Concrete) ஆக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது 3 அடி வலுவாக்கப்பட்ட


குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பு.


கொங்கிறீற்றும், 15 அடி உயரத்திற்கு மண்ணும் இருப்பின் கூட அதே வகையான பாதுகாப்பு கிடைக்கக் கூடியதா யிருக்கும்.

மேற்கூறப்பட்ட விஷேட அமைப்புகளேவிட மக்கள் அனேவராலும் அமைக்கக்கூடிய அகழிகள் இருவகைப் படு கின்றன. திறந்த அகழிகள், மூடிய அகழிகள் என்பவையே அவையாகும். இங்கு ஒப்பீட்டு ரீதியில் பார்க்குமிடத்து மூடிய அகழிகளானவை திறந்த அகழிகளேவிட அதிகளவு பாதுகாப்பை தரக்கூடியனவாகும். ஆனுலும் திறந்த அகழி களில் உள்ள நன்மை யாதெனின், குறுகிய அவகாசத்தினுள் அதிகமானேர் அதனுள் உடனடியாக மறைந்து கொள்ளக் கூடியதாக இருப்பதேயாகும்.

## திறந்த அகழிகள்


இவ்வகை அகழிகள் பொதுவாக பலர் கூடுமிடங்களுக்கு அருகிலேயே வெட்டப்பட வேண்டும். உதாரணமாக பாட சாலேகள், சந்தைகள், தியேட்டர்கள் போன்றவற்றி னுள்ளோ அல்லது அருகிலோ இவை அமைக்கப்பட வேண் டும். இவை தவிர பிரதான சாலேகளில் கூடியளவு சனப் புழக்கம் உடைய சந்திகள் போன்ற இடங்களிலும் கூட இவற்றை வெட்டி வைக்கலாம். இப்போதுள்ள சூழ்நிலே களில் அரச படைகள் ரோந்து வரக்கூடிய பிரதான வீதி களில் இவற்றை அமைத்தல் விரும்பத்தக்கதல்ல. நீங்கள் அமைக்கும் இடங்களிலும் தவிர்க்க முடியாத சந்தர்ப்ப மொன்றின் போது அரச படையினர் கண்களில் பட்டு விடுமாயின் வேறு ஏதாவது கட்டுக் கதையொன்றை அவர் களே நம்ப வைக்குமாறு கூறுவதற்கு தயாராக இருப்பின் மிகவும் சிறந்ததாகும். ஆனுல் தமிழீழப் போராட்டத்தின் உச்ச கட்டக் காலங்களில் அரச படையினர் முகாம்களே விட்டு நேருக்கு நேர் வந்து சண்டையிடுவதைவிட பெரு மளவு ஆகாய விமானத் தாக்குதல்களிலேயே ஈடுபடு வார்கள். அக்கால கட்டங்களில் இவ்வகை அகழிகள் பெரு மளவில் அமைக்கப் படுதல் வேண்டும்.





ஒற்றை அகழி ஒன்ருனது 8 அடி நீளமும், இரண்டரை அடி அகலமும், 3 தொடக்கம் 4 அடி வரை ஆழமும் கொண்டதாக இருக்க வேண்டும். இங்கு ஒரு நபருக்கு 4 சதுர அடி நிலப்பரப்பு தேவை என்பதால் மேற்கூறப்பட்ட அகழியினுள் ஐவர் மாத்திரமே பதுங்கக் கூடியதாக இருக்கும். மேலும் அதிகமானவர்களுக்காக திறந்த அகழிகள் வெட்டப்படும் போது ஒற்றை அகழி ஒன்றினை அப்படியே நீளத்தை அதிகரித்து பாவித்தல் புத்திசாலித்தனமல்ல. பதிலாக, முன்னர் அமைத்த அகழியுடன் தொடர்பானதாக, ஆனல் அதனுடன் 80 பாகைக்கும், 100 பாகைக்கும் இடைப்பட்ட கோணமொன்றை (அண்ணளவாக செங்குத்தாக) அமைக்கக் கூடியவாறு வேறொரு ஒற்றை அகழி ஒன்று 8 அடி நீளத்துக்கு வெட்டப்படலாம். இவ்வாறே மேலும் அதிகமானவர்களுக்காக, அலை வடிவத்தில் தொடர்ச்சியாக அமைக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் போதும் முழு நீளம் 30 அடிக்கு மேற்படாமல் இருக்க வேண்

குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பு.








டும். அவ்விடத்தில் மேலும் அகழி அமைக்க வேண்டிய தேவை ஏற்படுமாயின், முன்னர் அமைக்கப்பட்ட அலை வடிவ அகழி அமைப்பில் இருந்து 45 அடிக்கு குறையாத தொலைவிலேயே அடுத்த அகழி வரிசை அமைக்கப்பட வேண்டும். இவ்வகை திறந்த அகழிகளானவை கட்டிடங்கள் யாவற்றுக்காவது அருகில் அமைக்க வேண்டி இருப்பின், கட்டிடத்தின் உயரத்தின் அரைப்பங்கு தூரத்திலும் கூடியளவு தொலைவிலேயே அமைக்கப்பட வேண்டும். குண்டு வீச்சின் போது அக் கட்டிடம் இடிந்தால், அதன் உடை பகுதிகள் அகழியினுள் சிதறுது தடுப்பதற்காகவே மேற்கூறியவாறு அமைக்கப்பட வேண்டியுள்ளது.

பொதுவிடமொன்றில் இவ்வகையான அகழிகள் அமைக்கப்பட்டிருப்பின், அவ்விடத்திற்கு வந்து போகின்ற அனைவருக்கும் அது அமைந்திருக்கும் இடமும், அதனை அடையும் பாதையும் நன்கு தெரிந்திருந்தல் வேண்டும். ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒரு சமிக்ஞை ஒலி கேட்டவுடனேயே அவ்விடத்திலுள்ளவர்கள் உடனடியாக ஓடிச் சென்று அகழிகளினுள் குதித்து, பதுங்குதலை இடையிடையே பயிற்சியாக செய்து வைத்திருத்தல் சிறந்ததாகும். முக்கியமாக பாடசாலைகளில் இவை அவசியம் பயிற்றப்படுதல் வேண்டும். இதற்காக நீங்கள் உங்களுக்குள்ளேயே சிறு அமைப்பொன்றை ஏற்படுத்தி ஒழுங்கான முறையில் செயற்படுதல் விரும்பத்தக்கதாகும். அகழிகளினுள் ஓடிச் சென்று குதிக்கும் போதும், அனைவரும் ஒரு சேர ஓரிடத்தை நோக்கி ஓடிச் சென்று குதிக்காமல் பரந்து சென்று இயலுமானவரை ஐதாக முழு அகழி

களினுள்ளும் மறைப்புத் தேடுதல் கூடியளவு பாதுகாப்பைத் தருவதோடு விரைவாக செயற்படக் கூடியதாயும் இருக்கும்.


## மூடிய அகழிகள்






இவ்வகை அகழிகள் ஒவ்வொரு குடும்பத்தினராலும் அமைக்கப்பட வேண்டியனவாகும். இவை செலவு குறைந்த, நாளாந்தம் பாவனையிலுள்ள, இலகுவில் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டே அமைக்கக் கூடியவை. இவை திறந்த அகழிகளை விட சற்று ஆழமான, பாதுகாப்பான அகழிகளாகும். பொதுவாக 10 அடி நீளமுள்ளதாகவும், 6 அடி ஆழமுள்ளதாகவும் இவற்றினை அமைக்கலாம். இவற்றின் மேற்புறம் நாலரை அடி அகலமானதாகவும், அடிப்புறம் சற்றே குறுகியதாக மூன்றரை அடி அகலமானதாகவும் இருப்பின் சுவர்கள் இடிவுற்று விழுவது தடுக்கப்படுகிறது. உட்சுவர்களை மேலும் பலமானதாக்கி, சரிவுற்று விழுவதை தடைசெய்வதற்காக பலகைகள் கம்புகள் என்பன உட்சுவர்களுடன் இறுக்கமாக பொருத்தப்படலாம். தேவையாயின் இருக்கை வசதிகள் கூட செய்யப்படலாம்.

இவ்வகையான அகழியொன்றினை அமைப்பதற்காக இடமானது தெரிவு செய்யப்படும் போது, அரச படையின

ருக்கு சந்தேகம் ஏற்படா வகையில், உங்களால் இலகுவில் செல்லக்கூடிய இடமாயும் தெரிவு செய்யப்படல் வேண்டும். உதாரணமாக கோழி, ஆடு, மாடு போன்ற வீட்டு வளர்ப்புப் பிராணிகளின் கொட்டில்களின் கீழே அகழிகளை அமைத்து மேலே பிராணிகளை வளர்க்கலாம். வைக்கோற் போர்களின் கீழோ, குப்பை மேடுகளின் கீழோ, நீர்த் தொட்டிகளின் கீழோ, விறகு அடுக்கப்பட்டிருக்கும் இடத்தின் கீழோகூட இவற்றினை அமைக்க முடியும். வீட்டினது வெளி மதிற் சுவரினது உட்புறம் பூ மரங்களின் இடையே அமைத்தலோ, மலசல கூடங்களின் அருகில் அமைத்தலோ கூட அரச படையினரின் பார்வையில் இருந்து தப்பக்கூடியதாய் இருக்கும். இயலுமாயின் உங்களது வீட்டுக் கிணறுகளினூடு இறங்கி ஒரு பக்கத்தைக் குடைந்து உட்செல்லக் கூடியவாறு அமைத்தல் சிரமமாயிருப்பினும் அதுவும் சிறந்த ஒரு வழியாகும். சிலவேளைகளில் உங்களது வீட்டிற்கு மிக அருகில் ஏற்கனவே குண்டு போடப்பட்டு இடிவுற்ற நிலையிலோ அல்லது பாழ








டைந்த கவனிப்பாரற்ற நிலையிலோ கட்டிடங்கள் யாதாயினும் காணப்படின், அவ்விடிபாடுகளை அகற்றாது அதன் உட்புகுந்து வசதியான ஓரிடத்தில் நிலத்தின் கீழ் அமைத்தலும் அரச படையினருக்கு சந்தேகத்தை தராத ஒரு முறையாகும்.

இப்போதுள்ள சூழ்நிலையில் அரச படையினர் வீடுகளைச் சுற்றி வளைத்து ஒவ்வொரு வீடு வீடாக தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது குறைந்தே காணப்படுகிறது. அவர்களுக்கு தாம் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் விடுதலைப் புலிகளினால் ஆபத்து ஏற்படலாம் என்ற எண்ணத்தினால் ஏற்பட்ட பயத்தின் காரணமாக பெரியளவு எண்ணிக்கையுடன் வந்து சந்தேகத்திற்கிடமான ஒரு சில இடங்களில் திடீரென சோதனை செய்து விரைவில் வெளியேறி விடுகிறார்கள். இருப்பினும் உங்களுடைய அகழிகள் தற்செயலாய் அவர்களால் கண்டு பிடிக்கப்படின், அதற்குரிய காரணங்களோ, சோதிக்கப்பட்ட உண்மையெனத் தோன்றும் கட்டுக் கதைகளோ தயாராக இருக்க வேண்டும்.

இனி, ஒரு மூடிய அகழியொன்றை எவ்வகையில் அமைக்க வேண்டும் எனப் பார்ப்போம். இதன்போது பாவனைக்குத் தேவையான பகுதியாகிய 6 அடி ஆழமான

குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பு.


கிடங்கு ஒன்று வெட்டப்பட்டாலே போதுமானதாகும். ஆனால் இவ்வாறு வெட்டப்பட்டிருப்பின் அதற்கு தேவையான பாதுகாப்பான கூரையானது நில மட்டத்தின் மேலேயே அமைக்கப்பட வேண்டியதாயிருக்கும். இவ்வாறு அமைப்பது இலகுவில் பாதுகாப்புப் படையினரின் கவனத்தை ஈர்த்துவிடும் என்பதாலேயே இங்கு கூறப்படும் மூடிய அகழியமைப்புகள் அனைத்தின் கூரைகளையும் நிலத்தின் கீழேயே அமைக்குமாறு கூறப்பட்டிருக்கிறது. இருப்பினும் உங்களால் நில மட்டத்தின் மேல் கூரையமைப்பு அமைக்கப் பட்டு, அதனை வைக்கோலினால் மூடி ஒரு வைக்கோற் போரைப் போலவோ, அல்லது குப்பைகளை குவித்து ஒரு குப்பை மேட்டைப் போலவோ, அன்றி வேறு யாதாயினும் ஒரு வழியின் மூலம் அதனுள் அகழி இருப்பதை மறைக்கக் கூடியவாறு இருப்பின் அவ்வாறேயும் கூட அமைக்கலாம். அடுத்து, கூரை அமைப்பினை கருத்தில் கொள்ளும் போது அதற்குத் தேவையான பொருட்களைப் பார்ப்போம். இலகுவில் கிடைக்கக் கூடிய பொருட்களான மரக் கட்டைகள், சிறு பாறைகள் அல்லது பெரிய உறுதியான கற்கள், மண் அல்லது மணல் சாக்குகள் போன்றவையே அவையாகும். இங்கு உதாரணத்துக்காக செய்முறைகளுடன் தரப்பட்டிருக்கும் மூடிய அகழியானது முழுதாக நிலத்தின் கீழ் அமைக்கப்



பட்டதாகவும் மரக் கட்டைகள், சிறு பாறைகள், மண் போன்றவற்றைக் கொண்டு அமைக்கப்பட்ட 5 அடி உயரமுடைய கூரையினையும் கொண்டுள்ளது. இது ஒரு உதாரணமேயாகும். உங்களது அமைப்புகளும் இதே போல் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. மேலும் பாதுகாப்புள்ளதாக மாற்ற வேண்டுமெனின் கூரையின் உயரத்தினை நீங்கள் அதிகரிக்கலாம். ஆழமான கிடங்கு வெட்டுவது கடினமாக இருக்குமாயின் கூரையின் உயரத்தைக் குறைத்தோ அல்லது நிலத்துக்கு மேல் கூரை வரக்கூடியவாறோ அமைக்கலாம். கூரை அமைப்பதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் கூட உங்களுக்கு எவை இலகுவாகக் கிடைக்கிறதோ அவற்றினையே பயன்படுத்தலாம்.

*செய்முறை*

இடம் தெரிவு செய்யப்பட்டவுடன், எமக்குத் தேவையான பிரதேசத்திலும் சற்று கூடுதலான பகுதியில் இருந்து, மேற்படைமண்ணை புற்கள், இலைகளுடன் சேர்த்து அப்படியே தட்டுத்தட்டாக பெயர்த்து எடுக்க வேண்டும். சிறு செடிகள், புற்கள் பசுமையாக அதில் இருக்குமாயின், அதன் மேல் நீர் தெளிக்கப்பட்டு நிழலுள்ள பிரதேசத்தில் வைக்கப்




பட வேண்டும். பின்பு அவ்விடத்தில் ஏழரை அடி அகலத்துக்கு 1 அடி ஆழமுள்ள கிடங்கொன்று வெட்டப்பட வேண்டும். பின் அதனுள் நடுவே ஆறரை அடி அகலத்தில் ஒன்றரை அடி ஆழமாக்கப்படல் வேண்டும். பின் மீண்டும் உள்ளே ஐந்தரை அடி அகலத்தில் 2 அடி ஆழத்திற்கு வெட்டப்பட வேண்டும். இது வரை வெட்டப்பட்டிருக்கும் பகுதியே கூரை அமைப்பதற்காக பயன்படப் போகும் பகுதியாகும். இனி தங்கியிருக்கும் பகுதிக்கான கிடங்கானது உள்ளே முன்னர் குறிப்பிட்டவாறு மேல் பகுதி நாலரை அடி அகலமானதாகவும், அடிப்பகுதி மூன்றரை அடி அகலமானதாகவும் இருக்கும் வண்ணம் 6 அடி ஆழத்திற்கு வெட்டப்பட வேண்டும்.

மண் அகழும் வேலை நடக்கும்போது மண் கண்டபடி சிதறா வண்ணம் ஓரிடத்தில் சேமிக்கப்பட வேண்டும். இப்போது தங்குவதற்குப் பயன்படும் அடிப்பகுதியானது தேவையாயின் ஓரங்களில் பலகைகளோ, கட்டைகளோ இறுக்கப்பட்டு பலப்படுத்தப் படலாம். அதன்பின் மேலே ஐந்தரை அடி அகலத்தில் உள்ள கிடங்கின் 2 அடி உயரமான பகுதி முழுவதையும் 6-8 அங்குல விட்டமுடைய மரக்குற்றிகளை ஒன்றன் மேல் ஒன்றாக மூன்று அடுக்குகளுக்கு குறையாமல் படத்தில் காட்டியவாறு இட்டு நிரப்ப வேண்டும். இதற்கு உங்கள் பகுதிகளில் கிடைக்கும் வைரமான மரங்களை தெரிவு செய்து, அவை கறையான் அரிப்பிற்கு ஊடாகாமல் தடுப்பதற்காக சொலிக்னம்(Solignum)இடப்பட வேண்டும். அது கிடைக்காவிடின் கழிவு எண்ணெய், தார் முதலியவை கூடப் பூசலாம். இப்போது மரக்கட்டைகளிலான கூரையின் பகுதி முடிவடைந்ததும் அதன் மேல் நீர், மண் என்பன அகழியினுள் செல்லாது தடுப்பதற்காக பொலித்தீன் அல்லது கன்வஸ் போன்றவை இடப்பட வேண்டும். பின்பு அதன் மேல் உள்ள ஒன்றரை அடி உயரமான ஆறரை அடி அகலக் கிடங்கானது முற்று முழுதாக மண் இட்டு நிரப்பப்பட வேண்டும். மீண்டும் அதன் மேல் முன்னர் இட்டதைப் போன்ற நீர் புகவிடாத் தடுப்பு ஒன்று இடப்பட்டு, அதன்

மேல் உள்ள 1 அடி உயரமுடைய ஏழரை அடி அகலக் கிடங்கானது சிறு பாறைகள், கற்கள் முதலியவற்ருல் நிரப்பப்பட்டு சிறு படை மண் ஒன்ருல் மூடப்பட வேண்டும். இதன் மேல் ஏற்கனவே பெயர்த்தெடுத்து வைக்கப்பட்டிருந்த மேற்படை மண்ணுனது முன்பிருந்தது போலவே புற்கள், செடிகளுடன் பதிக்கப்பட வேண்டும். இப்போது அகழ்ந்தெடுக்கப்பட்ட மண் யாதாயினும் வெளியே இருப்பின் அது கவனமாக தொலை தூரத்திற்கு அகற்றப்பட வேண்டும்.


இந்த மூடப்பட்ட அகழியின் உட் செல்லுவதற்குரிய பாதையினை ஏற்கனவே வெட்டப்பட்ட பகுதியிலேயே ஒரு கரையில் சிறு பகுதி மூடப்படாமல் விடுவதால் அமைக்கலாம். அல்லது இதனுடன் சேர்ந்தாற் போல் 3×3 அடி அளவினையுடைய ஒரு கிடங்கொன்று மேலிருந்து அடிவரை படத்திற் காட்டியவாறு அமைக்கப்பட்டிருப்பின் கூட அதனுள் வைக்கப்பட்டிருக்கும் ஓர் ஏணியின் மூலம் உள்ளிறங்கக் கூடியதாக இருக்கும். அப் பாதையின் மேற்புறம் கூட சிறு தடிகள், புற்கள், இலைகள் கொண்டு கட்டப்பட்ட மூடி ஒன்றினுல் மூடப்பட்டிருக்க வேண்டும். தேவையான போது அதனைத் திறந்து உள்ளே சென்ற பின்னர் உள்ளிருந்தே அதனை மூடக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.



குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பு.

அகழியினது முழு வேலைகளும் முடிவடைந்த பின்னர் வெளியிலிருந்து பார்க்கும் பொழுது அங்கு அகழி இருப்பது முற்றிலும் தெரியாதவாறு அமைந்திருப்பின் அது மிகச் சிறப்பானதாகும். மேற்கூறியவாறு அகழியொன்றினை அமைப்பதற்கு மரக்கட்டைகளோ, கற்களோ கிடைக்கா விடின் கூட வெறுமனே மண் அல்லது மணலினால் கூட கூரை அமைக்கப்படலாம். சாதாரண இறுக்கமான மண்ணைப் பயன்படுத்துவீர்களேயாயின் குறைந்தது 5 அடி உயரமுடைய தாகவும், நன்கு காய்ந்து இறுக்கமற்ற கடற்கரை மணலாயின் குறைந்தது 4 அடி உயரமாவது இருக்க வேண்டும். மண் நிரம்பிய சாக்கு மூட்டைகளாயின் குறைந்தது 5 அடி உயர முடையதாகவும், மணல் நிரம்பிய சாக்கு மூட்டைகளாயின் குறைந்தது மூன்றரை அடி உயரமானதாகவும், கூழாங்கற்கள் போன்ற 1 அங்குலத்திலும் குறைவான அளவுடைய சிறு கற்களால் நிரப்பப்பட்ட சாக்கு மூட்டைகளாயின் குறைந்தது இரண்டரை அடி உயரமானதாகவும் இருக்கக் கூடியவாறு நெருக்கி ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட வேண்டும்.

இதுவரை குண்டு வீச்சு ஒன்று நிகழும்போதும், அதற்கு முன்பும் எவ்வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற் கொள்ள வேண்டும் எனக் கண்டீர்கள். இனி மீண்டும் மீண்டும் ஒரே பிரதேசம் ஒன்றில் குண்டு வீசப்படும் போது உங்களால் செய்யப்படும் ஒரு சில நடவடிக்கைகள் பற்றிப் பார்ப்போம். இவற்றின் மூலம் நீங்கள் குண்டு வீசும் விமான ஓட்டியை ஏமாற்றி, திசை திருப்பக் கூடியதாய் இருக்கலாம். அதாவது, முக்கியமாக இரவில் குண்டு வீச்சு நிகழ்கின்ற தாயின், உங்களது வீட்டிலுள்ள சகல விளக்குகளையும் அணைத்துவிட்டு, தோட்டத்தில் அல்லது பக்கத்திலுள்ள திறந்த வெளிகள் போன்றவற்றில் சிறு விளக்குகளை எரிய வைத்து விடுங்கள். இரவில் மேலிருந்து பார்க்கும் விமான ஓட்டி, விளக்குகள் எரியும் இடங்களில்தான் குடிமனைகள் அதிகமாக இருக்கும் என்ற எண்ணத்தில் அவ்விடங்களை நோக்கியே குண்டுகளை வீசுவார். எனவே, இதன் மூலம் உங்களது வீடுகள் காப்பாற்றப்படும் சாத்தியம் நிறைய உண்டு. ஒரு முறை குண்டு போடப்பட்ட பின்னர் மீண்டும்





விமானம் திரும்பி வருமாயின், ஏற்கனவே உங்களால் தயாரிக்கப்பட்ட போலிக் கொட்டில் அல்லது குப்பைக் கூழங்கள், டயர்கள் போன்றவற்றின் குவியல்களை நீங்களாகவே பற்ற வைத்து விடுங்கள். திரும்பி வரும் விமான ஓட்டி, தான் முதலில் குண்டு போட்ட இடங்களில்தான் நெருப்பு பற்றி எரிகிறது என்ற எண்ணத்தில் அவ்விடத்தை விடுத்து வேறிடம் நோக்கிச் செல்வான்.



குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பு.

பகலில் நிகழும் குண்டு வீச்சுக்களுக்கு, உங்கள் வீட்டுக் கூரையின் மேல் சிறு தாவரக் கொடிகளை கூரையை மூடும் வண்ணம் கண்டபடி படர விடுவதனால் மேலிருந்து பார்க்கும் போது வீட்டுத் தோட்டம் போன்ற எண்ணத்தை தோற்று விக்கும். இதனால் உங்கள் வீடுகளில் உண்டாகும் பாதிப்பு குறையலாம். உங்களது வீடுகளுக்கு அருகில் ஏதேனும் பாழடைந்த அல்லது பயன்படுத்த முடியாத கட்டிடங்கள் இருப்பின், அவற்றினை குண்டு வீச்சினால் தாக்கப்பட்டதைப் போல் இடித்து விடுவதாலோ, அல்லது ஏற்கனவே குண்டு வீச்சினால் தாக்கப்பட்ட கட்டிடம் ஒன்றாயின், அதன் இடி வுற்ற பகுதிகளை அகற்றி சுத்தம் செய்யும் முயற்சியில் ஈடு படாது அப்படியே விடுவதன் மூலமோ உங்கள் பகுதியில் மேலும் குண்டு வீச்சு நிகழாமல் தடுக்கலாம்.

இதுவரை குண்டு வீச்சுக்கெதிரான பாதுகாப்பு நட வடிக்கைகளை பற்றி அறிந்த நீங்கள் அவற்றினை அலட்சியம் செய்யாது செயற்படுத்த முனைவீர்களேயாயின், சிறீலங்கா அரச படையினரின் இன ஒழிப்பு நடவடிக்கைகளை முறி யடிப்பதோடு உங்களையும் காப்பாற்றிக் கொண்டவர்களா வீர்கள். இச்சிறு நூலானது எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அரச படையினரின் கைகளில் சிக்காது பாதுகாப்பது உங்களது கடமையாகும். இதில் கண்ட எந்த ஒரு விடயம் பற்றிய விளக்கமோ அல்லது மேலதிக விபரமோ உங்களுக்குத் தேவைப்படுமாயின், உங்கள் பகுதியில் உள்ள 'தமிழீழ விடு தலைப் புலிகளின்' முழு நேர உறுப்பினரொருவருடன் தொடர்பு கொள்ளுங்கள். அவர் உங்களுக்கு உதவுதோடு, இதிற் கண்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் உங்க ளுக்கு வேண்டிய உதவிகளை புரிவார்.



நேசப் படைகளின் குண்டு வீச்சானது நிகழும்போது ஜப்பானிய மக்கள் திறந்த அகழிகளினுள்ளும், கட்டிடங்களின் அருகிலும் பதுங்கியிருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

Liberation Tigers Of
TAMIL EELAM

